# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1816/35 - 2013 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2013.06.28

*1816/35 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்**

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 111 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 111 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும் நிதி, திட்டமிடல் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இந்த அறிவித்தல் கட்டளை மூலம், இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசின் கொழும்புத் துறைமுகமொன்றாக மேல் மாகாணத்திலுள்ள கொழும்பைப் பிரகடனப்படுத்தி நியமிப்பதோடு மற்றும் தொடர்புபட்ட எல்லைகளை அட்டவணையின் அ முதல் உ வரை காட்டப்பட்டுள்ளவாறாகவும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் கொழும்புத் துறைமுகத்துக்குள் பொருட்கள் மற்றும் பொருட்களது அஞ்சல், தரையிறக்கல், இறக்கியவற்றினை களஞ்சியப்படுத்தல், ஏற்றுமதி, மீள் ஏற்றுமதி மற்றும் கொள்கலனில் அடைக்கப்பட்ட சரக்கினது வருகை மற்றும் பயணிகள் வெளிச் செல்லுகை ஆகியவற்றுக்காக அத்தகைய எல்லைகளையும் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி
(நிதி, திட்டமிடல் அமைச்சர்).

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2013, யூன் 28.

கட்டளை

கொழும்புத் துறைமுக சுங்க எல்லையானது இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் உள்ள இடப்பரப்பாக வேண்டும்.

***அட்டவணை***

(அ) பின்வரும் எல்லைகளைக் கொண்ட இடப்பரப்பு :

வடக்கு : முகத்துவாரம் முனையிலிருந்து 1.54 ஆவது கடலோட்டமைலில் 027 பாகையில் அமைந்துள்ள (அ) என்னும் முனையிலிருந்து 275 பாகை திசையில் 6.5 கடலோட்டமைலில் தூரத்திற்கு வரையப்பட்ட ஒரு கோட்டின் மூலம் ;

***அட்டவணை*** *(தொடர்ச்சி)*

*தெற்கு : கல்போக்க முனைக்கு அருகில் உள்ள கொடி கம்பத்திலிருந்து 1 ஆவது கடலோட்டமைலில் கடற்கரையில் உயர நீர்மட்டத்தில் அமைந்துள்ள (ல) என்னும் இன்னொரு முனையின் மேற்கே 6 ஆவது கடலோட்டமைலில் அமைந்துள்ள (ஆ) எனும் முனையிலிருந்து 165.5 பாகையின் திசையில் (ல) முனைக்கும் (ல) முனையிலிருந்து கடலின் உயர நீர் மட்டம் நெடுகிலும் வடக்குத் திசையாக பெட்டின்பார்க் பீரங்கி வளவின் வடக்கெல்லை சுவர் வரையிலும் பின்னர் அங்கிருந்து பெற்றின்பார்க் பீரங்கியின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லைச் சுவர்கள் நெடுகிலுமாக கோள்பக் புகையிரதக்கடவை வரையிலும், கடவை நெடுகிலும்...... அங்கிருந்து கொமிசாறியட் வீதியின் சுவர் நெடுகிலுமாக அரசாங்க களஞ்சியங்களின் வடமேற்கு மூலைக்கும், அங்கிருந்து கொமிசாறியட் வீதியிலுள்ள அரசாங்க களஞ்சியக் கட்டிடத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பக்கங்கள் நெடுகிலுமாக கொமிசாறியட் நுளைவாயிலிருந்தும் நுழைவாயிலுக்கும் அத்துடன் கொமிசாறியட் நுளைாவாயிலின் கோடு நெடுகிலுமான இலங்கை சுங்கக் கட்டிடத்தின் சுவருக்கும் ; அங்கிருந்து சுங்கத்தின் தெற்குப்பக்கம் மற்றும் இலங்கைத் துறைமுக அதிகார சபை அலுவலகங்கள், கராஜ்கள் நெடுகிலுமாக, அங்கிருந்து அரச வீதியின் வடக்கு எல்லை சுவர் நெடுகிலுமாக, சுங்க இல்லத்தின் நுழைவாயிலுக்கு எதிரே உள்ள வீதியின் குறுக்கே நிலைத்திருக்கும் சுவர்க்கோட்டின் நெடுகிலுமாக லேடன் பெஸ்ரியன் நுழைவாயிலுக்கும், லேடன் பெஸ்ரியன் நுழைவாயில் நெடுகிலும் அத்துடன் லேடன் பெஸ்ரியன் வடக்கு எல்லைச் சுவர் நெடுகிலுமாக ஏரியின் துறை சுவர் மேற்கு மற்றும் துறைமுகக் கால்வாய் வரையிலும் ; அங்கிருந்து மெயின் வீதி பாலத்தின் மேற்குச் சுவர் நெடுகிலுமாக மெயின் வீதியின் தெற்கெல்லை சுவருக்கும், அங்கிருந்து மெயின் வீதியின் தெற்கெல்லைச் சுவர் மற்றும் லோட்டஸ் வீதியின் கிழக்கெல்லைச் சுவர் மற்றும் நொறிஸ் வீதியின் வடக்கெல்லைச் சுவர் நெடுகிலுமாக எபின் மேற்குத் துறைக்கும் துறைமுகக் கால்வாய்க்கும், அங்கிருந்து எரியின் மேற்குத் துறை நெடுகிலுமாக துறைமுகக் கால்வாய்க்கும் நொறிஸ் வீதி பாலத்தின் தென் மேற்கு முனைப்புக்கும், அங்கிருந்து தகர வேலி நெடுகிலுமாக (கால்வாயின் மேற்குத் துறைக்கு 20 அடி அப்பாலும் அதற்குச் சமாந்திரமாகவும்) புகையிரதப் பாலத்தின் வடமேற்கு முனைப்புக்கும், அங்கிருந்து மேற்குத்துறை நெடுகிலுமாக புகையிரதப் பாலத்தின் தென்பகுதி மீதான புகையிரத எல்லையின் குறுக்கு வெட்டு முனையொன்று வரையிலும் ; அங்கிருந்து புகையிரதப் பாதையின் தென்பகுதி மீதான புகையிரத எல்லை நெடுகிலுமாக கொம்பனி திசையில் சுமார் 100 அடியிலுள்ள முனையொன்றுக்கும் ; அங்கிருந்து மெகலம் வீதியின் குறுக்காக அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், வளவின் வடக்கு – கிழக்கு எல்லைகள் நெடுகிலுமாக மேம்பாலம் வரையிலும், அங்கிருந்து மேம்பாலத்தின் மேற்குப்பக்க சுவர் மற்றும் வீதியின் மேற்குப்புற ஓரத்தடுப்பு நெடுகிலுமாக பாசன்ஸ் வீதியின் கிழக்கு எல்லைச் சுவர் வரைக்கும் ; அங்கிருந்து பாசன்ஸ் வீதி எல்லைச் சுவர் நெடுகிலுமாக கால்வாயின் இறக்குத்துறை வரைக்கும் ; அங்கிருந்து கால்வாய்துறை நெடுகிலுமாக புகையிரதப் பாலம் வரைக்கும் ; அங்கிருந்து காலிமுக ஏரியின் வடக்கு, மேற்கு, தெற்கு துறை சுவர்கள் நெடுகிலுமாக தெற்குத் துறையின் கிழக்குக் கோடிவரையிலும் ; அங்கிருந்து மேற்கு ஏரியின் மேற்குப்புற வரிசையில் குளக்கட்டாக அமைகின்ற கொங்றீட் கட்டிகள் நெடுகிலுமாக கொம்பனித்தெரு பிறிச் வீதி பாலம் வரையிலும்; அங்கிருந்து பிறிச் வீதி பாலத்தின் மேற்குச் சுவர் மற்றும் மேற்கு எரியின் மேற்குப்புற வரிசையில் குளக்கட்டாக அமைகின்ற கொங்றீட் கட்டிகள் நெடுகிலுமாக ஜெனறல் லேக் வீதியின் மேற்குப்புற வரிசையில் குளக்கட்டாக அமைகின்ற கொங்றீட் கட்டிகள் மற்றும் கோட்டன் வீதியின் தென்புறம் அத்துடன் மேற்கு ஏரியின் கிழக்குப் புற குளக்கட்டு ஆகியன நெடுகிலுமாக பிறிச் வீதி பாலம் வரையிலும் அங்கிருந்து பிறிச் வீதி பாலத்தின் கீழக்குப் புறம் மற்றும் குளக்கட்டாக அமைகின்ற கொங்றீட் கட்டிகள் நெடுகிலுமாக புகையிரதப் பாலம் வரைக்கும் ; அங்கிருந்து புகையிரதப் பாலத்தின் தெற்குச் சுவர், துறைசுவர், பாசன்ஸ் வீதி பாலத்தின் தெற்குச் சுவர், துறை சுவர் ஆகியன நெடுகிலுமாக கொழும்பு றோலிக கிளப் வளவுக்கு எதிரே உள்ள துறையின் கோடி வரையிலும் ; அங்கிருந்து கிழக்கு எரியின் மேற்குப் புறத்தின் கீழ் குளக்கட்டாக அமைகின்ற கொங்றீட் கட்டிகள் நெடுகிலுமாக இராணுவ வேலைத்தள வளவின் கிழக்கு எல்லை வேலி வரையிலும் ; மோர்கின் வீதிக்கு குறுக்கே மோர்கின் வீதியின் தென்புறம் மற்றும் கியுபொயின்ட் வீதியின் வடபுறம் நெடுகிலுமாக பாசன்ஸ் வீதி வரையிலும் ; அங்கிருந்து பாசன்னஸ் வீதியின் கிழக்குப் புறம் நெடுகிலுமாக கியுபொயின்ட் வீதியின் தென்புறத்தை சந்திக்கின்ற ஒரு புள்ளி வரையிலும் ; அங்கிருந்து கியுபொயின்ட் வீதி மற்றும் மோர்க்கின் வீதியின் தெற்குப்புறம் நெடுகிலுமாக கியுபொயின்ரிலுள்ள இலங்கைப் பொலிஸ் வளவின் கிழக்கு எல்லை வேலி வரையிலும் ; அங்கிருந்து இலங்கைப் பொலிஸ் வளவின் கிழக்கெல்லை வேலி நெடுகிலுமாக குளக்கட்டாக அமைகின்ற கொங்றீட் கட்டிவரையிலும் ; அங்கிருந்து கிழக்கு எரியின் மேற்கு வரிசையில் குளக்கட்டாக அமைகின்ற கொங்றீட் கட்டி நெடுகிலுமாக ஹைட் பாக்கின் வட கோடியில் உள்ள குளக்கட்டு வரையிலும் வரையப்படும் ஒரு கோடின் மூலம் ;*

*கிழக்கு : தெற்கு எல்லையின் கிழக்கத்திய அந்தம் என்று மேலே குறிப்பிட்டவாறான கொம்பனித்தெரு, ஹைட்பாக்கில் உள்ள குளக்ட்டின் மீதான ஒரு புள்ளியிலிருந்து குளக்கட்டாக அமைகின்ற கொங்றீட் கட்டிகள் நெடுகிலுமாக ஹரிசன்ஸ் குறோஸ்பீல்ட் லிமிட்டெட் வளவுக்கு எதிரேயுள்ள துறை சுவரின் தென் கோடி வரையிலும் ; அங்கிருந்து துறை நெடுகிலுமாக துறை சுவரின் வட கோடி வரையிலும்; குளக்கட்டாக அமைகின்ற கொங்றீட் கட்டிகள் நெடுகிலுமாக கிழக்கு எரியின் வடபுறத்திலுள்ள துறைசுவரின் கிழக்குக் கொடி வரையிலும் ; அங்கிருந்து துறை சுவர் நெடுகிலுமாக சென். செபஸ்தியான் கால்வாயின் கிழக்குப் பக்கம் மீதான துறையின் தொடர்மாடக்குக் கட்டுவரையிலும்; அங்கிருந்து கால்வாயின் துறை, களனி வெளி, பிரதான வடிகால்கள் ஆகியவற்றின் நெடுகிலுமாக நொறிஸ் வீதிப்பாலம் வரையிலும் ; அங்கிருந்து நொறிஸ் வீதிப்பாலத்தின் பக்கச் சுவர் கால்வாய் அடைப்பமைப்பின் துறைசுவர், சென் செபஸ்தியான் வீதி ஆகியவற்றின் நெடுகிலுமாக சென். செபஸ்தியானிலுள்ள கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவின் நீர் இறைப்பு நிலையத்தின் கிழக்கெல்லை வேலியைக் குறுக்காக வெட்டும் துறைச் சுவரின் ஒருமுனை வரையிலும் ; அங்கிருந்து கால்வாயின் குறுக்கே நீர் இறைப்பு நிலைய வளவின் கிழக்கெல்லை வேலி, நீர் இறைப்பு நிலைய வடக்கெல்லைச் சுவர், மேற்கெல்லை வேலி நெடுகிலுமாக நீர் இறைப்பு நிலைய வளவின் மேற்கெல்லை வேலியை ஒட்டிய துறை சுவர் மீதான ஒருமுனை வரையிலும் ; அங்கிருந்து சென். செபஸ்தியான் வீதியிலுள்ள பாலத்தின் வடக்குப் பக்கச் சுவர் மற்றும் அடைப்பமைப்பின் வடக்குப் பக்கம் மீதான துறை சுவர் ஆகியவற்றின் நெடுகிலுமாக நொறிஸ் வீதி பாலம் வரையிலும் ; அங்கிருந்து பிரதான வடிநிலத்தை சுற்றிக்கொண்டு துறை சுவர் நெடுகிலுமாக கால்வாய்த்துறையின் தொடர்மடக்குக் கட்டு வரையிலும் ; அங்கிருந்து கால்வாய் துறையின் நெடுகிலும் புகையிதப்பாலத்திற்கும் மெகலம் வீதிப் பாலத்திற்கும் கீழாக கால்வாயின் ஏரி முடிவில் உள்ள துறையின் தொடர் மடக்குக்கட்டு வரையிலும் ; அங்கிருந்து துறை சுவர் நெடுகிலுமாக பொயிஸ் பிறதறிஸ் வளவின் கிழக்கெல்லை சுவர் கோட்டினைச் சந்திக்கும் துறை சுவர் மீதான ஒரு முனை வரையிலும்; அத்துடன் பொயிஸ் பிறதர்ஸ் வளவின் கிழக்கு – வடக்கு எல்லைச் சுவர் நெடுகிலுமாக கிழக்கு அடைப்பமைப்பின் கிழக்குச் சுவர் வரையிலும்; அங்கிருந்து மெகலம் வீதியின் கீழுள்ள பாலத்தின் கிழக்குச் சுவர் நெடுகிலுமாக மெகலம் வீதியின் வடக்கெல்லைச்சுவர் வரையிலும்; அங்கிருந்து மெகலம் வீதியின் வடக்குச் சுவர் நெடுகிலுமாக கிழக்குத் திசையில் சுவரின் தொடர் மடக்குக்கட்டு வரையிலும் ; அங்கிருந்து வளியின் மேற்கெல்லைச் சுவர் நெடுகிலுமாக*

***அட்டவணை** (தொடர்ச்சி)*

*கோட்டைப் புகையிரத நிலையம் மற்றும் அடைப்பமைப்பு வடிகாலின் வடக்குப் பக்கம் உள்ள தகர வேலி வரையிலும் ; அங்கிருந்து அடைப்பமைப்பு வடிகாலின் வடக்குப்பக்கம் மீதான தகர வேலி நெடுகிலும், அங்கிருந்து தகர வேலி நெடுகிலுமாக புகையிரத ஒதுக்கிடத்தின் தெற்குப்பக்கத்தை குறுக்கே வெட்டுகின்றதொரு முனை வரையிலும் ; அத்துடன் புகையிரத ஒதுக்கிடம் நெடுகிலுமாக துறைசுவர் வரையிலும்; அங்கிருந்து புகையிதப் பாலத்தின் கிழக்குச் சுவர் நெடுகிலுமாக புகையிரத ஒதுக்கிடத்தின் வடக்குப்பக்கத்தை குறுக்காக வெட்டுகின்ற ஒரு முனைவரையிலும்; அங்கிருந்து புகையிரத ஒதுக்கிடத்தின் தகர வேலி நெடுகிலுமாக முட்கம்பி வேலியின் குறுக்கு வெட்டிலுள்ள ஒரு முனைவரையிலும் ; அங்கிருந்து முட்கம்பி வேலி நெடுகிலுமாக நொறிஸ் வீதி பாலத்தின் தெற்குச் சுவர் வரையிலும் அத்துடன் நொறிஸ் வீதிப் பாலத்தின் தெற்குச் சுவர் நெடுகிலுமாக துறை சுவர் வரையிலும் ; அங்கிருந்து நொறிஸ் வீதிப்பாலத்தின் கிழக்குச் சுவர் நெடுகிலுமாக நொறிஸ் வீதிப்பாலத்தின் வடமுனைைப்பு வரையிலும் ; அங்கிருந்து மெயின் வீதியின் வடக்கெல்லை சுவர் நெடுகிலும் சாமஸ் துறை வளவுக்கு இட்டுச் செல்கின்ற புகையிரதப் பாதையின் மேற்குப்பக்கம் மீதான புகையிரத கடவைக்கம்பம் வரையிலும் ; அங்கிருந்து கொழும்பு மாநரக சபையின் கிழக்கு, தெற்கு, மேற்கு எல்லைச் சுவர்கள் மற்றும் அரச மர வணக்கத்தல வளவு நெடுகிலுமாக மெயின் வீதியின் தெற்கெல்லைச் சுவர் வரையிலும் ; அங்கிருந்து மெயின் வீதியின் தெற்கெல்லைச் சுவர் நெடுகிலுமாக கால்வாய்த்துறை வரையிலும் ; அங்கிருந்து மெயின் வீதிப் பாலத்தின் கிழக்குச் சுவர் நெடுகிலுமாக மெயின் வீதிப் பாலத்தின் வடமுனைப்பு வரையிலும்; அங்கிருந்து மெயின் வீதியின் வட எல்லைச் சுவர் நெடுகிலுமாக மெயின் வீதிக்குக் குறுக்கே புகையிரத கடவையின் வடக்குக் கம்பம் வரையிலும் ; அங்கிருந்து சங்கிலித்தடை நெடுகிலுமாக றெக்லமேசன் வீதிக்குக் குறுக்கே புகையிரதக் கடவையின் வடக்குக் கம்பம் வரையிலும் ; அங்கிருந்து நேர்கோட்டில் துறைமுகப் பொறியியலாளர் திணைக்கள நேர அலுவலகக் கட்டிடத்தின் தென் மேற்கு மூலை வரையிலும் ; அங்கிருந்து மேற்சொன்ன நேர அலுவலக கட்டிடத்தின், தெற்குப் பக்கம் மற்றும றெக்லமேசன் வீதியினதும் கடற்கரை வீதியிலும் வடக்கெல்லைச் சுவர் நெடுகிலுமாக கொச்சிக்கடை கடவை வரையிலும்; அங்கிருந்து கொச்சிக்கடை கடவை வரிசை நெடுகிலும் கொச்சிக்கடை வீதியின் மேற்குச் சுவர் நெடுகிலுமாக புனித அந்தோனியார் தேவாலயத்தின் தெற்குப் பக்கம் வரையிலும் ; அங்கிருந்து புனித அந்தோனியார் தேவாலயத்தின் தெற்கு, மேற்கு, வடக்குப் பக்கம் நெடுகிலுமாக உப்புக்குளம் வீதியின் மேற்கெல்லையாக அமைகின்ற தகர வேலி வரையிலும் ; அத்துடன் தகர வேலி நெடுகிலுமாக புனித அந்தோனியார் கடவை வரையிலும்; அங்கிருந்து கொச்சிக்கடை நுளைவாயில் வரிவை மற்றும் உப்புக்குள வீதியின் மேற்கெல்லையாக அமையும் தகர வேலி நெடுகிலுமாக டங்கியு சல்காது நுழைவாயில் வரையிலும் ; அங்கிருந்து டங்கியு சல்காது நுழைவாயிலின் வரிசை அத்துடன் அளுத்மாவத்தை வீதியின் மேற்கெல்லையாக அமையும் 10 அடி உயர கம்பி வேலி நெடுகிலுமாக கொழும்புத்துறைமுக ஆணைக்குழுவின் தேங்காய் எண்ணெய் குதங்கள் உள்ள வளவுக்குத் தென் வாயிலில் உள்ள ஒவ்வொரு வேலியின் தொடர் மடக்குக் கட்டு வரையிலும் ; அங்கிருந்து அளுத்மாவத்தை வீதியின் மேற்குத்தடையாக அமையும் சங்கிலித்தடை நெடுகிலுமாக இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தேங்காய் எண்ணெய் குத வளவின் வடக்கு வாயிலில் உள்ள மேற்சொன்ன வேலியின் தொடர்மடக்குக்கட்டு வரையிலும் ; அங்கிருந்து 10 அடி உயர கம்பி வேலி நெடுகிலும் அத்துடன் அளுத்மாவத்தைப் பாலத்தின் மேற்கு மதில் சுவர் மற்றும் மேற்சொன்ன வேலி நெடுகிலுமாக கடற்றொழில் விடுதிகளின் தெற்குப் பக்கம் மீதான கொழும்பு மாநகர சபை மலசல கூடம் வரையிலும் ; அங்கிருந்து கொழும்பு மாநகர சபை மலசல கூடத்தினது கிழக்கு மற்றும் தெற்குச் சுவர்கள் நெடுகிலுமாக கடற்றொழில் விடுதிகளின் தெற்கெல்லையாக அமையும் எல்லைச் சுவர் வரையிலும் ; அங்கிருந்து கடற்றொழில் விடுதிகளின் தெற்கெல்லைச் சுவர் நெடுகிலுமாக பிசர்ஸ் ஹில் வீதியின் தென்பக்கம் மீதான தகர வேலி வரையிலும் ; அங்கிருந்து தகர வேலி மற்றும் பிசர்ஸ் ஹில் வீதியின் தெற்கெல்லையாக அமையும் சுவர் நெடுகிலுமாக பிசர்ஸ் ஹில் நுழைவாயில் வரையிலும்; அங்கிருந்து பிசர்ஸ் ஹில் நுழைவாயிலின் வரிசை, பிசர்ஸ் ஹில் வீதியின் வடக்குச் சுவர், மேற்கு எல்லைச் சுவர், றொக் ஹவுஸ் ஒழுங்கை மீதான வேலி ஆகியன நெடுகிலுமாக "வூட்லன்ஸ் என்று அறியப்படும் வளவின் வட- கிழக்கு மூலையிலுள்ள வேலியின் தொடர் மடக்குக் கட்டுவிலுள்ள ஒரு "முனைவரையிலும்"; அங்கிருந்து றொக் ஹவுஸ் ஒழுங்கையின் அந்தத்துக்கு குறுக்காக றொக் ஹவுஸ் பீரங்கி வளவின் மேற்கெல்லை வரையிலும் ; அங்கிருந்து றொக் ஹவுஸ் பீரங்கியின் மேற்கெல்லை, முகத்துவார முனையினது கடல் இடுக்கின் தெற்குப் பக்கம் மற்றும் றொக் ஹவுஸ் பீரங்கியின் வடக்கெல்லை ஆகியன நெடுகிலுமாக பிசர்ஸ் ஹில் வீதி வரையிலும் ; அங்கிருந்து பிசர்ஸ் ஹில் வீதியின் மேற்கெல்லை வேலி மற்றும் மார்சல் வீதியினது தெற்கெல்லை ஆகியன நெடுகிலுமாக மார்சல் வீதியினது தெற்கெல்லைச் சுவரின் அந்தம் வரையிலும் ; அங்கிருந்து மார்சல் வீதி அந்தத்தின் குறுக்கேயும் கிளிவ் ஹவுஸ் வளவின் கிழக்கு, மேற்கு எல்லைச் சுவர்கள் நெடுகிலுமாக கிளிவ் ஹவுஸ் வளவின் வடக்கு எல்லையுடன் உள்ள உயர் நீர்மட்டத்தை ஊடறுக்கம் ஒரு முனை வரையிலும்; அங்கிருந்து உயர் நீர்மட்ட நெடுகிலுமாக "அ" என்னும் முனையின் நேர் தெற்கே 0.6 கடலோட்டமையிலில் அமைந்துள்ள "ர" என்னும் இன்னொரு முனையிலிருந்து வரையப்பட்ட கோடொன்றின் ஊடுறும் இடத்தில் அமைந்துள்ள கடற்கரை மீதான முனையொன்று வரையிலும் ; வடக்கெல்லையின் கிழக்கத்தைய அந்தம் "ர" என்னும் முனையிலிருந்து 206 பாகை கொண்ட திசையிலும், அங்கிருந்து "ர" முனைக்கு வரையப்படும் ஒரு நேர்கோட்டில் "ர" முனைக்கு வடக்கே 0.6 கடலேட்டமைலில் "அ" என்னும் முனைவரையிலும் வரையப்பட்ட ஒரு கோட்டின் மூலம் ;*

*மேற்கில் : வடக்கு, தெற்கு எல்லைகளின் மேற்கத்திய அந்தங்களைத் தொடுக்கும் ஒரு கோட்டின் மூலம்.*

*(ஆ) புளூமென்டல் எண்ணெய் டிப்போ எனும் அறியப்படும் இடப்பரப்பு, பின்வரும் எல்லைகளைக் கொண்டிருக்கும் :-*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *முடிக்குரிய காணியாலும், அளுத்மாவத்தை வீதியில் 478/1- 28, 28 அ என்னும் மதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட காணியாலும், திரு. சி. எஸ். அந்தோனிக்குச் சொந்தமான புளூமென்டல் களஞ்சியங்களாலும் ;* |
| *கிழக்கு* | : | *புளூமென்டல் வீதியாலும் முடிக்குரிய காணியாலும் ;* |
| *தெற்கு* | : | *வோல்ஸ் ஒழுங்கையினால் ;* |
| *மேற்கு* | : | *"டீப் டெனி" என அறியப்படுவதும் அளுத்மாவத்தை வீதியின் 458 ஆம் மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டதுமான முடிக்குரிய காணியாலும், தோட்டம்- 47 வீதி - 59, தோட்டம் - 59 என்னும் மதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட தனியார் காணியாலும்.* |

**அட்டவணை** (தொடர்ச்சி)

(இ) நீர்கொழும்பினது நீரின் இடப்பரப்பு வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் நேர்கோடுகளினால் எல்லைப்படுத்தப்பட்டு பின்வரும் இியைபுகளைக் கொண்டிருக்கும் :-

| | | | |
|---|---|---|---|
| (அ) | அகலக்கோடு | 07 பாகை | 15 வ ; |
| | நெடுங்கோடு | 79 பாகை | 40 கி ; |
| (ஆ) | அகலக்கோடு | 07 பாகை | 10 வ ; |
| | நேர்க்கோடு | 79 பாகை | 41.5 கி ; |
| (இ) | அகலக்கோடு | 07 பாகை | 10 வ ; |
| | நேர்க்கோடு | 79 பாகை | 48. 5 கி ; |
| (ஈ) | அகலக்கோடு | 07 பாகை | 15 வ ; |
| | நேர்க்கோடு | 79 பாகை | 47 கி. |

(ஈ) பாணந்துறையினது நீரின் இடப்பரப்பு வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் நேர்கோடுகளினால் எல்லைப்படுத்தப்பட்டு பின்வரும் இயைபுகளைக் கொண்டிருக்கும் :-

| | | | |
|---|---|---|---|
| (அ) | அகலக்கோடு | 06 பாகை | 43 வ ; |
| | நெடுங்கோடு | 79 பாகை | 46.5 கி ; |
| (ஆ) | அகலக்கோடு | 06 பாகை | 38 வ ; |
| | நேர்க்கோடு | 79 பாகை | 48.5 கி ; |
| (இ) | அகலக்கோடு | 06 பாகை | 38 வ ; |
| | நேர்க்கோடு | 79 பாகை | 53 கி ; |
| (ஈ) | அகலக்கோடு | 06 பாகை | 43 வ ; |
| | நேர்க்கோடு | 79 பாகை | 51.5 கி. |

(உ) கொழும்பு தெற்குத் துறைமுகம் - முதலாம் கொள்கலன் வாயில் -

*2011, ஓகத்து மாதம் 02 ஆந் திகதியிடப்பட்டதும் உரிமம் பெற்றநில அளவையாளர் திரு. பீ. ஆர். ஆர். பி. ஜயசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்டதுமான நில வரைபுத் திட்ட இல.* LS/ P/ 327 *இல் காணித்துண்டு இல. 1 இன் மூலம் குறித்துக் காட்டப்பட்டுள்ளதன் கீழ் அடங்குகின்ற முழுக் காணியும் மற்றும் கடல் பிரதேசமும் (இலங்கைத் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான நிலம் மற்றும் கடல் பிரதேசங்களிலிருந்து ஒரு பகுதியாகும் ) கொழும்பு தெற்குத் துறைமுக முதலாம் கொள்கலன் வாயில் எனப்படுகிறது. இது மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர சபை எல்லையினுள் கோட்டையை நோக்கி அமைந்துள்ளதோடு, வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகளில் கடல் அமைந்து காணப்படுகிறது. மேலும் மேற்படி வரைவுத் திட்ட இல.* LS/ P/ 327 *இன் பிரகாரம், இதன் விஸ்தீரணமானது நூற்றி நாற்பத்திநான்கு ஏக்கர்கள், ஒரு றூட் மற்றும் ஒன்று தசம் எட்டு இரண்டு பேர்ச்சஸ் (144ஏ. 01றூ. 1.82 பே.) பரப்பைக் கொண்டதாகும். இது ஐம்பத்தி எட்டு தசம் மூன்று எட்டு பூச்சியம் ஐந்து ஹெக்டேயருக்குச் சமமாகும் (58.3805 ஹெக்டேயார்).*

*07 - 541*